1978 செப்டம்பர் 2]

(முற்பகல் 9-30)

முப்பதாண்டுக் காலத்தில் நாங்கள் திரும்பக் கொடுத்து விடுகிறோம் என்று உறுதி மொழி பத்திரம் மூலமாகக் கொடுத்தால் நிச்சயமாக இந்த அரசு முடித்து விட்டு மெதுவாக முப்பதாண்டுக் காலத்தில் பெற்றுக்கொள்ளும்.

கல்வராயன் மலைப்பகுதியிலுள்ள நிலங்கள் விற்பனை

*வினா எண் 51—திரு. துரை முத்துசாமி: மாண்மிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்வராயன் மலைவாழ் மக்களிடமிருந்து வெளியார் (மலை ஜாதியார் அல்லாதார்) வாங்கிய நிலங்கள் செல்லாது என சட்டம் இயற்றும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் என்றால் அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: (அ) ஆம்.

(ஆ) மாநில அளவில், பழங்குடியினர் தம் நிலத்தை மற்றவர்களுக்கு மாற்றம் செய்வதைத் தடுக்கச் சட்டம் கொண்டு வருவது பற்றி அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன் மலைப் பகுதியில் அரசாங்கத்தின் மூலமாகப் பல ரோடுகளைப் போட்டிருக்கிறார்கள். அதன் விளைவாக அங்குள்ள விவசாயிகளுடைய நிலம் எடுக்கப்பட்டிருக்கிறது. ரோடுகள் போட்டு இரண்டாண்டுகளாகியும் அவர்களுக்கு இன்னும் நஷ்டயீடு கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு நஷ்டயீடு கொடுக்கப்படுமா, எப்பொழுது கொடுக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, கேள்வி, நில மாற்றத்தைத் தடுக்கப் புதிய சட்டம் கொண்டு வருவது பற்றியது. நஷ்டயீட்டைப் பற்றியது அல்ல. தனிக் கேள்வி போட்டால் விவரம் சொல்கிறேன்.

திரு. எம். அண்ணாமலை: தலைவரவர்களே, மலைவாழ் மக்களுடைய நிலங்களைத் தனியார்கள், வெளியார்கள் கைப்பற்றியதை அரசு பரிசீலிக்கும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். எந்த அடிப்படையில் அது பரிசீலிக்கப்படும்? குறிப்பாக 30 ஆண்டுக் காலமா, அல்லது 60 ஆண்டுக்காலமா அல்லது ஐந்தாண்டுக் காலமா என்று வரையறுத்துக் குறிப்பிட்டால் அதுபற்றிய விவரத்தை அறிந்து கொள்ள உதவியாக இருக்கும். அதை அமைச்சரவர்கள் கூறுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, மலைவாழ் மக்கள் தாங்கள் பட்ட கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத சூழ்நிலையில் வெளியார்கள் இதுபோல நிலத்தை அபகரித்துக் கொள்கிறார்கள். ஆகவே, அவர்களின் எதிர்கால வாழ்க்கையை முன்னிட்டு அரசாங்கம் இதற்காக ஒரு சட்டத்தைக் கொண்டுவரத் தீவிரமாகப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. எத்தனை ஆண்டுக் காலம் என்று வரையறுக்க வேண்டுமென்பதற்காக இப்பொழுது நம்முடைய அலுவலாளர்களை விட்டு தெரிந்தெடுத்த மலைப் பகுதிகளில் ஆய்வு நடத்தச் சொல்லி யிருக்கிறோம். அவர்கள் அறிக்கை கொடுத்த பிறகு எத்தனை ஆண்டுகள் என்பதை இந்த அரசு நிர்ணயிக்கும்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, மலைவாசி மக்களுடைய நிலங்களை வெளியார் வாங்கியிருப்பதாகச் சொன்னார்கள். எத்தனை பேர்கள் அவ்வாறு வாங்கியிருக்கிறார்கள்? எத்தனைபேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, அதுபற்றி விரிவாகக் கண்டு பிடிக்க வேண்டுமென்பதற்காக எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்தும் அறிக்கை கேட்டு அனுப்பியிருக்கிறோம். அந்த அறிக்கை வந்த பிறகு எத்தனை பேர் என்று இறுதியாகச் சொல்ல முடியும்.

சட்டமன்ற LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS